பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை ? காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 19] சென்னை: ஐப்பசி 16 (2—11—71) செவ்வாய் வெளியூர்: ஐப்பசி 17 (3—11—71) புதன் [இதழ்: 116

நாள்தோறும் 4,300 குழந்தைகள் பலி

அகதிகள் முகாமில் அவல நிகழ்ச்சி

வாஷிங்டன், நவ. 2—

இந்தியாவில் உள்ள அகதிகள் முகாம்களில் நாள்தோறும் 4,300 குழந்தைகள் இறந்துவருவதாகவும், இந்த ஆண்டுக்குள் மேலும் 2,00,000 குழந்தைகள் இறந்துவிடக்கூடும் என்றும் செனட்டர் கென்னடி தெரிவித்திருக்கிறார்.

சேலம் உருக்காலைக்கு மீண்டும் சோதனை?

தஸ்தூர் நிறுவனம் கிளப்பியுள்ள புதிய சிக்கல்

உருக்கு அமைச்சர் மோகன் குமாரமங்கலம் வெளியிடும் வேதனைச் செய்தி

புதுடில்லி, நவ. 2—

பல நெருக்கடிக் கட்டங்களையும் தாண்டி வந்துகொண்டிருக்கும் சேலம் உருக்காலைக்கு இப்போது புதிய தடைக்கல் ஒன்று ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

சேலம் உருக்காலைக்கு நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்துவது குறித்து மறுசிந்தனை செய்யப்பட்டு வருகிறதாம்.

இதனைத் தெரிவித்த உருக்குத்துறை அமைச்சர் மோகன் குமாரமங்கலம், சேலம் உருக்காலை அமைப்புக்கான தொழில் ஆலோசனை நிறுவனமான தஸ்தூர் நிறுவனத்தின் செயல்முறை அறிக்கையும்--அதன் முடிவான மாற்று யோசனையும் இந்த மாத முடிவுக்குள் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்தார்.

ஆனால், மாற்று யோசனை என்பதன் பொருள் என்ன என்பது குறித்து அவர் விளக்கம் தரவில்லை; ஆயினும் இது குறித்த விவரங்கள் ஓரளவுக்குத் தெரியவந்திருக்கின்றன.

தஸ்தூர் நிறுவனம் நடத்திய ஆய்வில், 'சேலம் உருக்காலைக்கு நெய்வேலி நிலக்கரியும்--கஞ்சமலை இரும்புக் கனியும் பயன்படாது' என்று தெரியவந்ததாம்.

கடந்த செப்டம்பரில் மத்திய அமைச்சகத்துக்கு இதுபற்றித் தெரிவிக்கப்பட்டதாம்; சேலம் உருக்காலைக்கு ஆஸ்பெட்டிலிருந்து இரும்புக் கனியும், சிங்கரேணியிலிருந்து நிலக்கரியும் கொண்டு வந்து பயன்படுத்தலாம் என்றும் அது யோசனை கூறியதாம்.

இதே தஸ்தூர் நிறுவனம் தனது முதல் ஆய்வு அறிக்கையில், 'நெய்வேலி நிலக்கரியையும்--கஞ்சமலை இரும்புக்கனியையும் பயன்படுத்தி உருக்காலை அமைக்கலாம்' என்று கூறியதற்கு இது ஒரு பேரிடியாக அமைந்தது.

ஏற்கனவே நெய்வேலியிலிருந்து ஒரு சிறு பகுதி நிலக்கரி மட்டுமே எடுத்து ஆராயப்பட்டதாகவும், அதில 'சல்பர்' என்னும் பொருள் அதிகபட்சம் 0 8 சதவிகிதத்தில் குறைந்தே இருந்ததாகவும், இதன் அடிப்படையிலேயே சேலம் ஆலைக்குப் பரிந்துரை செய்யப்பட்டதாகவும் தஸ்தூர் நிறுவனம் கூறியது; இப்போது மேலும் நிலக்கரியை ஆராய்ந்தபோது, இந்த 'சல்பர்' பொருள் அதிக அளவு இருப்பதாகத் தெரியவந்ததாக அந்நிறுவனம் காரணம் கூறுகிறது.

இதே நிலக்கரியைப் பயன்படுத்த வேண்டுமென்றால், இந்த 'சல்பர்' அளவைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், உற்பத்திச் செலவை இது மேலும் கூடுதலாகும் என்றும், ஆகவே சிங்கரேணியிலிருந்து நிலக்கரி கொண்டுவருவது சிக்கனமானதாக இருக்கும் என்றும் அது கருதுகிறதாம்.

உருக்குச் செய்முறையிலும் மாற்றம் செய்யப்பட வேண்டியிருக்கும் என்றும் தஸ்தூர் நிறுவனம் இப்போது கூறுகிறதாம்; முதல் ஆய்வினபோது திட்டமிடப்பட்ட உற்பத்தி முறை, அப்போது பல நாடுகளிலும் பரிசார்த்தமாக நடத்தப்பட்டதாகும் என்றும், இப்போது அது எதிர்பார்த்த பலன் தரவில்லை என்று அனுபவத்திலிருந்து தெரியவருவதாகவும், ஆகவே ஆய்வினபோது திட்டமிடப்பட்ட உற்பத்தி முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் தஸ்தூர் நிறுவனம் தெரிவிக்கிறதாம்.

இப்போது கூறப்பட்டிருக்கும் இந்தக் கருத்துக்கள் இறுதியானது அல்ல என்றும், ஆய்வு மேலும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், குறைந்தபட்சம் கஞ்சமலை இரும்புக் கனியையாவது பயன்படுத்த முடியுமா என்பது குறித்துப் பரிசீலிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

திரிபுரா -- அமைச்சரவை பதவி நீக்கம்

ஆட்சிப் பொறுப்பை குடியரசுத் தலைவர் ஏற்றார்

புதுடில்லி, நவ 1—

திரிபுராவில் குடியரசுத் தலைவர் ஆட்சி செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

மத்திய ஆட்சிப் பகுதிகள் சட்டவிதிகள் சிலவற்றின் செயல்பாட்டை 4 மாதங்களுக்கு குடியரசுத் தலைவர் நிறுத்தி வைத்திருப்பதாகவும், முதலமைச்சரும், இதர அமைச்சர்களும் பதவி நீக்கம் செய்யப்படுவதாகவும் இங்கு வெளியிடப்பட்ட அதிகாரபூர்மான அறிவிப்புக் கூறுகிறது.

பிளேக் தடுப்பு நடவடிக்கை

சென்னை, நவ. 2—

"திருப்பூர், சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளிலும், கோவை மாவட்டத்திலும் பிளேக் நோய் தடுப்புக்கான மருந்துகள் -- மாத்திரைகள் -- மருந்துத் தெளிப்பு வேலைகளுக்காக ரூ. 1,95,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் அறிவித்தார்.

பிளேக் எலி வளைகளில் அடிப்பதற்காக கொடிய நஞ்சு மருந்தான 'சைனோ வாயு' (சைனோ காஸ்) ஒரு டன -- மருந்து தெளிப்பான் கருவி நூறு -- ஆகியவை வாங்கவும் முதலவர் உத்தரவிட்டுள்ளார்.

10 இலட்சம் பிளேக் தடுப்பு மாத்திரைகள் -- ஸ்டெரப்போமைஸின் ஊசி மருந்து 5,000--தடுப்பு மாத்திரைகள் 10,000 -- ஆகியவை வாங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே பம்பாய் ஹாப்கின் நிறுவனத்திடம் பிளேக தடுப்பு ஊசி மருந்து ஓர் இலட்சம் வாங்குவதற்கு ஆடர் கொடுக்கப்பட்டது.

இது தவிர, மேலும் ஒரு இலட்சம் டன ஊசி மருந்து அனுப்பிவைக்கும்படி மைசூர் மாநிலத்திடம் கோரப்பட்டுள்ளது.

தமிழ் ஏடுகட்குத் தடை

இலங்கையின் உத்தரவு அமுல்

கொழும்பு, நவ. 2—

தமிழ்ப் பத்திரிகைகளின் இறக்குமதியைத் தடைசெய்யும் இலங்கை அரசின் உத்தரவு நேற்றிலிருந்து செயலுக்கு வந்துவிட்டது.

தமிழ் நாளிதழ்களும் -- சினிமாப் பத்திரிகைகளும் இறக்குமதி முழுவதும் தடை செய்யப்பட்டது சில வாரப் பத்திரிகைகள் இறக்குமதி மட்டும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஐ. நா.-வின் அமைப்பு முறையே மாறும்

சீனாவுக்குப்பக்கத்தில்இந்தியா அமரும் வாய்ப்பு

புதுடில்லி, நவ. 2—

எதிர்பார்க்கப்படுவது போலவே நிலைமைகள் நடைபெறுமானால், பாதுகாப்புச் சபையில் இந்தியாவும் -- சீனாவும் ஒன்றாக அமரக்கூடிய வாய்ப்பு ஏற்படக்கூடும்.

இந்த ஆண்டு சீனா நிரந்தர உறுப்பினராகும் அதே நேரத்தில், அடுத்து காலியாகக்கூடிய பாதுகாப்புச் சபை உறுப்பினர் பதவிக்கு இந்தியா போட்டியிடுகிறது; இந்தியாவைப் பெரும்பாலும் எல்லா நாடுகளும் ஆதரிக்கின்றன; பாகிஸ்தான் மட்டுமே எதிர்க்கிறது.

இதுவரையில் ஏற்பட்ட அனுபவத்தின்கீழ், ஐ.நா. அமைப்பு முறையில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்தும் நில அடிப்படையில் பிரதிநிதித்துவம் தர வேண்டியது குறித்தும் பொதுச் சபை யோசனை கேட்டிருந்தது.

புதிதாகச் சீனா சேர்ந்திருப்பதால் ஐ.நா. சபைக்கு இப்போது ஒரு புதிய தோற்றமே ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. அமெரிக்கா, இரஷ்யா ஆகிய இரு வல்லரசுகளின் விருப்பு-வெறுப்புக்கேற்ப இனிமேல் ஐ.நா.-வை இயங்கவிட அனுமதிப்பதில்லை என்று ஏற்கனவே சீனா அறிவித்திருக்கிறது; ஆகவே, எந்த மாறுதல் செய்வதாக இருந்தாலும், அது பாதுகாப்புச் சபையின் அமைப்பு முறையை மாற்றினால்தான் முடியும்.

புதிய சூழ்நிலையில், ஆசியாவுக்கு மேலும் ஒரு நிரந்தர உறுப்பினர் பதவி தர வேண்டியிருக்கும்; ஜப்பானுக்கு அமெரிக்கா தீவிரமாக ஆதரவு திரட்டினாலன்றி இந்தப் பதவி இந்தியாவுக்கே கிடைக்க வேண்டியது இயற்கையாகும் என்று கூறப்படுகிறது.

ஐ. நா.-வில் சீனக் கொடி

ஐ. நா. சபைக் கொடிக் கம்பத்தில் நேற்று முதல் தடவையாக சீனக் கொடி பறக்கவிடப்பட்டது.

இஸ்ரேல் பாராட்டுச் செய்தி -- சீனா திருப்பியனுப்பியது

பாதுகாப்புச் சபையில் சீனா உறுப்பினராக்கப்பட்டதைப் பாராட்டி இஸ்ரேல் அனுப்பிய செய்தியை, சீனா திருப்பி அனுப்பியிருக்கிறது.

சீனாவை அனுமதிக்க வேண்டுமென்றும், தைவானை வெளியேற்றவும் இஸ்ரேலும் வாக்களித்திருந்தது; ஆயினும், 'சீனாவுக்கும் -- இஸ்ரேலுக்கும் இடையில் அஞ்சல் தொடர்பு ஏற்படுத்தப்படவில்லை' என்று கூறி, சீனா, இஸ்ரேலின் வாழ்த்தைத் திருப்பி அனுப்பிவிட்டது.

சிறிய பத்திரிகைகட்கு வரி விலக்கு

நிதியமைச்சர் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 2—

'15,000 பிரதிநிதிகள் வரை விற்பனையாகும் சிறு பத்திரிகைகளுக்கு விதிக்கப்படவிருக்கும் 2 காசு எக்சைஸ் வரியிலிருந்து விலக்களிக்கப்படும்"

என்று நிதியமைச்சர் சவாண் இன்று கூறினார்.

"நவம்பர் 15-ந்தேதி செயலுக்கு வரும் புதிய வரி, வங்கதேசப் பிரச்சினை தீர்ந்ததும் ரத்து செய்யப்படும்" என்று மகாராட்டிரப் பத்திரிகையாளர் தூதுக் குழுவிடம் அவர் தெரிவித்தார்.

காங்கிரசுத் தியாகிகளின் கோரிக்கை

உடனடியாக ஏற்று உத்தரவிட்டார் கலைஞர்

'தியாகிகளை மதித்துப் போற்றும் அரசு' என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டு

சென்னை, நவ. 2—

திருவாளர்கள் எஸ். என். சோமயாசுலு, டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, எஸ். பெருமாள், டி. இராமகிருஷ்ணன் ஆகியவர்கள் நேற்று மாலை தமிழக முதல்வர் டாக்டர் கருணாநிதி அவர்களைச் சந்தித்தனர்.

"முன்பிருந்த காங்கிரசு அரசு, 1966-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள், 'சுதந்தர வீரர்களுக்கு மானியம் வழங்க வேண்டும்' என்று உத்தரவிட்டது; ஆனால் அந்த மானியம், 'அனாதை'களாக உள்ள சுதந்தர வீரர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது; சுதந்தர வீரர்களைக் கவுரவிக்கும் வகையில் -- தொடர்ந்து உதவித் தொகை வழங்குதல் போன்ற பல்வகை நன்மைகளைச் செய்துவரும் தாங்கள், எங்களுடைய தியாகத்தையும் -- உணர்ச்சிகளையும் மதித்து, 1966-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்டுள்ள அரசு ஆணையில் காணப்படும் 'அனாதை' என்ற வார்த்தையை நீக்கிவிட வேண்டும்" என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

அவர்கள் கோரிக்கையை உடனடியாக முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார்; 'அனாதை' என்ற அந்த வார்த்தையை அரசு ஆணையிலிருந்து நீக்கிவிட்டு உரிய மாறுதல் செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கிருதாக்கள் மறைந்தன!

கலைஞரின் பேச்சு பலன் தருகிறது

திருச்சி, நவ. 2—

இதுவரை கிருதா வைத்துக்கொண்டிருந்த தமிழக அரசின் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருவர் இப்போது அதைக் கைவிட்டு விட்டனராம்.

அதிகாரிகள்கூட கிருதா வைத்துக்கொண்டிருக்கும் செயலை, அண்மையில் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கண்டித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

'மது கூடாது' என்பதுதான் இன்றும் கழகக் கொள்கை

கலைஞரின் தூண்டுதலால்தான் நான் மதுவிலக்குப்பிரசாரத்தில் ஈடுபட்டேன்

காழ்ப்புணர்ச்சிக்காரர்களின் பொய்ப் பிரச்சாரத்துக்குக் கழகப் பொருளாளர் எம். ஜி. ஆர். சூடு

பாராட்டு விழாவில் அமைச்சர் சி.பா. ஆதித்தனார்- ம. பொ. சி. புகழாரம்

சென்னை, நவ. 2—

"'மது கூடாது' என்பதுதான் அண்ணாவின் கொள்கையும் -- கலைஞரின் கொள்கையும் -- கழகத்தின் கொள்கையும் ஆகும்.

"மதுவிலக்குப் பிரச்சாரத்தை நான் துவக்கியதற்குக் கலைஞருக்கும்--எனக்கும் உள்ள கசப்புணர்ச்சிதான் காரணம் என்று பொய்ப் பிரச்சாரம் செய்கிருர்கள்; என்னை அப்படிப் பிரச்சாரம் செய்யத் தூண்டியவரே கலைஞர் அவர்கள்தான்!

"மத்திய அரசின் பாராமுகம்--நிதி நெருக்கடியும், மதுவிலக்கு ஒத்திவைப்புக்குக் காரணமே தவிர கழக அரசின் கொள்கை அதுவல்ல!

"எனது ரசிகர்கள் அனைவரும், 'மதுவைத் தொடக்கூடாது' என்று உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்; என் பெயரால் உள்ள ரசிகர் மன்றங்களில் அந்தப் பழக்கமுடைய எவரும் உறுப்பினராக இருக்கக் கூடாது.

"இருபத்தைந்து வயது இளைஞன்போல் நான் இருப்பதாக சிலம்புச்செல்வர் அவர்கள் சொன்னார்; மதுப் பழக்கம் எனக்கில்லாதது அதற்கு ஒரு காரணம் என்பதை நீங்களெல்லாம் உணர வேண்டும்"

என்று கழகப் பொருளாளர்--புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

வண்ணை எம். ஜி. ஆர். கலை மன்றத்தின் 13-வது ஆண்டு விழாவும் --- சத்யா மூவிஸ் 'ரிக்ஷாக்காரன்' படத்தின் 150-வது நாள் வெற்றி விழாவும் வண்ணை இராபின்சன் பூங்காவுக்கு அருகில் நடைபெற்றது.

கூட்டுறவுத்துறை அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் -- புரட்சி நடிகர் எம். ஜி ஆர்., சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், சென்னை மேயர் சா. கணேசன், சத்யா மூவிஸ் உரிமையாளர் ஆர். எம். வீரப்பன், மு. வேதாசலம் எம். எல்.ஏ., மோகனரங்கம் ஆகியோரும், 'ரிக்ஷாக்காரன்' படக் கலைஞர்கள் பலரும் பேசினர்.

முசிறிப் புத்தன் வரவேற்புரை வழங்கினார்.

'ரிக்ஷாக்காரன்' படக் கலைஞர்களுக்கு கேடயங்கள் பரிசளிக்கப்பட்டன.

வண்ணைப் பகுதி எம். ஜி. ஆர். மன்றச் சார்பில், திரு. சி. பா. ஆதித்தனார், எம். ஜி. ஆர்., ம. பொ. சி., ஆர். எம். வீரப்பன், நடிகை மஞ்சுளா ஆகியோருக்குப் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் தமது உரையில் மேலும் கூறியதாவது:—

"இங்கே பேசிய சிலம்புச் செல்வர் ம. பொ. சி அவர்கள், நான் ஒரு சிறந்த அரசியல்வாதியாகவும்--தலை சிறந்த கலைஞனாகவும் திகழ்வதாகக் குறிப்பிட்டார்; அதே நேரத்தில், 'கலைஞர்களுக்கு அரசியல் கூடாது என்ற கொள்கையிலேயேதான் இன்னமும் இருக்கிறேன்' என்றும் அவர் சொன்னார்.

அண்ணா அவர்களின் கொள்கை என்னவென்றால், 'எவன் தன்னுடைய நாட்டுக்காகத் தியாகங்களைச் செய்கிறானே --- எவன் தனது தாய்மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறானே-- தொழிலாளிகளுக்காகவும், அபலைக் கண்ணீர் விடுகின்ற பெண்கள் சமுதாயத்தின் செம்மைக்காகவும் யாரெல்லாம் பாடுபடுகிறார்களோ அவர்களெல்லாம் அரசியல்வாதிகளாகும் தகுதி பெற்றவர்களே' என்றுகூறினார்.

'நாணயமும் --- நம்பிக்கையும் கொண்டிருப்பதால், நான் அரசியலில் இருப்பதில் ஆட்சேபணை இல்லை' என்கிறார்கள்.

என்னுடைய அந்தச் சிறப்புக்குக் காரணமே நான் அறிஞர் அண்ணா அவர்களின் வழியில் வந்தவன் என்பதுதான்!

என்னைப் பாராட்டும் அருகதை தனக்கில்லை -- என்று அமைச்சர் ஆதித்தனார் சொன்னார்; என்னுள் இருக்கிற அண்ணாவை-- என்னுள் இருக்கின்ற கழகக் கொள்கைகளைப் பற்றிச் சொன்னதாகத்தான் அதற்கு அர்த்தம்.

அமைச்சர் ஆதித்தனாரும், ம. பொ. சி. அவர்களும் என்னைப் பாராட்டுகிறார்கள் என்றால், என்னுடைய கொள்கை வெற்றி பெற்றதாகவே நான் கருதி மகிழ்கிறேன்.

எனக்கும் -- ரிக்ஷாக்காரர்களுக்குமுள்ள தொடர்பு பற்றி இங்கே ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டார்கள்; ரிக்ஷாக்காரர்களுக்கு அண்ணா அவர்கள் இருந்தபோது -- அண்ணாவின் கையாலேயே மழைக் கோட்டு கொடுத்தேனே -- ஏன்? அந்தக் கோட்டில் கழகத்தின் சின்னம் பொறித்திருந்தேனே --- அது ஏன்? ஏழெட்டு ஆண்டுகளுக்குப்பிறகு நண்பர் வீரப்பன் இப்படி ஒரு படம் எடுப்பார் என்றா? -- அது வல்ல காரணம்.

சில நாட்களுக்கு முன்னால் இங்கே வந்திருந்த ஜப்பானிய ஜூடோ சண்டை வீரர்களுக்கும் நான் பரிசு அளித்தேன்; அதிலும் கழகச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது--இது ஏன்?

நான் வளர்கின்றபோதே கழகத்தையும் வளர்க்கிறேன் -- என்று சிலம்புச் செல்வர் குறிப்பிட்டாரே -- அதற்காகத்தான்!

இப்போதுகூட, அறிஞர் அண்ணா அவர்களின் 63-வது பிறந்த நாள் விழாவின் காரணமாகக் காசிமேடு பகுதியில் கழகக் கொடியை ஏற்றிவைத்துவிட்டுத்தான் நான் இங்கே வந்தேன்."

அமைச்சர் ஆதித்தனார்

அமைச்சர் சி. பா. ஆதித்தனார் அவர்கள், தமது தலைமையுரையில் பேசியதாவது:—

"புரட்சி நடிகர் எம். ஜி ஆர். ஒரு தலைசிறந்த நடிகர்; கலையுலகின் உச்சியில் நிற்பவர்; அவருக்கு நடத்தப்படுகின்ற இந்த விழாவுக்குத் தலைமைதாங்கும் தகுதி எனக்கிருக்கிறதா என்பது புரியவில்லை.

கழகத்தின் மிக முக்கியமான கேந்திரமாக இருப்பவர் நம்முடைய புரட்சி நடிகர் ஆவார்!

ஒருவர், இரண்டு கலையிலே வல்லவராக இருக்க முடியாது; நான் வழக்கறிஞராக இருந்தபோது வேறு பிரச்சினைகளை என்னால் கவனிக்க முடியவில்லை; பத்திரிகை ஆசிரியனானபோதும் அதைத் தவிர வேறு எதையும் கவனிக்க முடியவில்லை.

ஆனால், எம். ஜி. ஆர். அவர்களோ, கலைத் துறையிலும், முதலிடத்தில் இருக்கிறார்! அரசியலிலும் தலைசிறந்து விளங்குகிறார்!

அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாட்டைக் கண்போல் பாதுகாத்து வருபவர்களில் புரட்சி நடிகரும் ஒருவராவார்!"

ம. பொ. சிவஞானம்

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் பேசியதாவது:—

"பணத்துக்காகவோ, புகழுக்காகவோ மட்டும் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ரிக்ஷாக்காரனாக நடிக்கவில்லை; ரிக்ஷாக்காரர்கள் எப்படி இருக்கவேண்டுமென்று தாம் கனவு கண்டாரோ -- அதையே படத்தில் காட்டியிருக்கிறார்!

ரிக்ஷாக்காரர் நலிந்தபோதெல்லாம் அவர் உதவியிருக்கிறார்; மழைக் கோட்டுகள் தந்திருக்கிறார்; அவர்களுடைய மகிழ்ச்சிக்காக உதவியிருக்கிறார்; இப்படி, அவருக்கும் -- ரிக்ஷாக்காரர்களுக்கும் உள்ள தொடர்பு பழமையானதாகும்.

கலைஞர்கள் என்றாலே அவர்கள் ரசிக்கப்படுபவர்களாகத்தான் இருப்பார்கள் -- மதிக்கப்படுபவர்களாக இருப்பதில்லை!

ஆனால், ரசிக்கப்படுபவராகவும் -- மதிக்கப்படுபவராகவும் இருக்கின்ற ஒரே ஒருவர் உண்டென்றால், அவர், புரட்சி நடிகர்தான்!

படத்தின் சண்டைக் காட்சிகளிலே இருபத்தைந்து வயது இளைஞனைப்போல இருக்கிறார் -- நண்பர் எம். ஜி. ஆர்.!

'கலைஞர்களுக்கு அரசியல் கூடாது' என்ற கொள்கையில் இருப்பவன் நான்; ஆனால், நாணயம் தவறாமல் அரசியலில் இருக்கிறார் புரட்சி நடிகர்; அதை நான் வரவேற்கிறேன்; இந்த நல்ல தன்மையினாலேயே அவர் வேறு கட்சிக்காரர்களின் பெருமதிப்பைப் பெற்றிருக்கிறார்!"

பாகிஸ்தானில் பெரும் பண நெருக்கடி

அந்நியச் செலாவணிப் பஞ்சத்தால் தொழில்கள் பாதிப்பு

புதுடில்லி, நவ. 2—

பாகிஸ்தானில் உள்ள நிதியுதவி செய்யும் நிறுவனங்கள் வெளிநாட்டுச் செலாவணிப் பஞ்சத்தில் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டுத் துவக்கத்திலிருந்தே வெளிநாடுகளிலிருந்து வரும் உதவியும் கடனும் குறைந்ததுதான் இதற்குக் காரணமாகும்.

இதில் அதிகம் பாதிக்கப்பட்டது தொழில் வளர்ச்சி பாங்கிகளாகும்; தொழிற்சாலைகளிலிருந்து அதற்கு வந்த நூற்றுக்கணக்கான மனுக்களுக்கு வெளிநாட்டுச் செலாவணி அளிக்கமுடியாமல் அது திண்டாடுகிறது; அதன் காரணமாக, மேற்குப் பாகிஸ்தானில் தொழில்களை நவீனமயமாக்கும் வேலைகள் அப்படியே நின்றுவிட்டன.

பாகிஸ்தானிலேயே பெரிய நிதி உதவி நிறுவனம் தொழில் கடன் முதலீட்டுக் கார்ப்பரேஷனே; ரூபாய்ச் செலாவணி உள்ள பகுதிகளிலிருந்து தொழில் திட்டங்களுக்கு நிதியுதவும் திட்டத்தை அது புகுத்தியது; ஆனால் தொழில் வட்டாரங்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்குகின்றன; 'உள்நாட்டில் உற்பத்தியான இயந்திரத்தின் விலை அதிகமாக இருப்பதுடன் தரமும் குறைவாக இருக்கிறது' என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இதற்கிடையில், பங்கு மார்க்கெட்டுக்கு நிதி ஆதரவு தருவதை நிதியுதவி நிறுவனங்கள் நிறுத்தி வைத்திருப்பதாகவும், இதனால் பங்கு மார்க்கெட் நெருக்கடி அதிகமாகிவிட்டதாகவும் 'பாகிஸ்தான் டைம்ஸ்' ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறது.

நூல் ஆலைகளுக்கு உறுப்புகள் பற்றுக்குறை ஏற்பட்டிருப்பதாகவும், பஞ்சு விலைகள் மிகவும் உயர்ந்திருப்பதாகவும், ஆகவே, இந்தத் தொழிலை அழியாமல் காப்பாற்றி உதவ வேண்டும் என்றும் அகில பாகிஸ்தான் பஞ்சாலைகள் சங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மீனவர்களுக்கு இயந்திரப் படகுகள்

சென்னை -- செங்கற்பட்டு மாவட்டங்கள் ஏற்பாடு

சென்னை, நவ. 2—

சென்னை -- செங்கற்பட்டு மாவட்டங்களில் மீனவர்களுக்கு இயந்திரப் படகுகளைக் கட்டி வழங்குவதற்கான திட்டம் ஒன்று விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன் உதவியுடன் செயல்பட்டுவருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு மீனவர்கள் சம்மேளனம் இந்தத் திட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது; இதற்கான முதலீடு ரூ. 28.13 இலட்சம் ஆகும்.

ஆரம்பக் கடல் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்குப் படகுகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன; மேலும் 20 படகுகள் வழங்குவதற்குத் தயாராக உள்ளன; மேலும் 29 படகுகள் தமிழ்நாடு அரசுப் படகு கட்டும் தளத்தில் கட்டப்பட்டுவருகின்றன.

படகுக் கட்டுவதற்கான செலவில் 75 சதவிகிதம்வரை தமிழ்நாடு அரசு ஏற்கிறது.

படகுகளை வாங்குவதற்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன் அளிக்கும் நிதியைக் கொண்டு கூட்டுறவு பாங்கி, கடன் உதவி வழங்குகிறது.

மீன்களைச் சேமித்துவைப்பதற்காகச் சென்னையில் குளிர் பதன நிலையம் ஒன்றை அமைப்பதற்கும், மீன்களைப் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும், மேற்பார்வைப் பணிகளுக்காகவும் 'வேன்'களை வாங்கவும விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன் உதவி அளிக்கிறது.

குளிர்பதன நிலையத்தை அமைப்பதற்கான இடம்பற்றி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

நெல்லை மாவட்டத்தில் மீனவர்களுக்கு இயந்திரப் படகுகளை வழங்குவதற்கான திட்டத்தை மேற்கொள்ளவும் விவசாய மறுநிதிக் கார்ப்பரேஷன் அங்கீகாரம் அளித்திருக்கிறது.

தமிழ்நாட்டில் தீவிரப் பருத்திச் சாகுபடி

சென்னை, அக். 31—

தமிழ்நாட்டில் பருத்தி உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசு ரூ. 66 இலட்சம் செலவில் தீவிரப் பருத்திச் சாகுபடித் திட்டம் ஒன்றை அனுமதித்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின்படி, மூன்றாண்டுகளில் 60,000 பேல் உயர் ரகப் பருத்தி உற்பத்தியாகும்.

தொடக்கத்தில், கோவை மாவட்டத்தில் பாசன வசதியுள்ள பகுதிகளில் 2 இலட்சம் ஏக்கரில் அதிக விளைச்சல் தருவதும், உயர் ரகமுமான 'எம்.சி யு. 5'-'சுஜாதா' போன்றவை பயிரிடப்படும்.

நெல்லையில் வானம் பார்த்த பகுதிகளில் 50,000 ஏக்கரில் பாரதி பயிராகும்.

பருத்திச் சாகுபடியில் விவசாயிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்க மத்திய அரசு பல்வேறு சலுகைகள் வழங்கும்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அந்தமான் பயணம்

இலங்கைத் தமிழர்களைக் குடியமர்த்துவது பற்றி ஆராய்வார்

இதுவரையில் 35,688 பேர் தமிழகம் வந்துள்ளனர்

சென்னை, நவ. 2—

இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு இதுவரையில 35,688 பேர் அகதிகளாகத் திரும்பியுள்ளனர்.

இலங்கை அகதிகளைக் குடியமர்த்தி, இரப்பர் தோட்டங்களும் -- தென்னந் தோப்புக்களும் அமைத்துக் கொடுக்கும் திட்டதை ஆராய்வதற்காகத் தமிழக அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்துவும், அகதிகள் மறுவாழ்வுத் துறை இயக்குநர் வெங்கடகிருஷ்ணனும் அந்தமான் செல்கிறார்கள்.

இலங்கைக்கும் -- இந்தியாவுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் (சாஸ்திரி – சிரிமாவோ ஒப்பந்தம்) அடிப்படையில் இலங்கையிலிருந்து 6 இலட்சம் பேர் தாயகம் திரும்பவேண்டும்; இவர்களில், கடந்த வாரம் முடிய 35,688 தமிழகம் வந்துள்ளனர்.

வாரத்திற்கு 2 கப்பல்கள் வீதம் (ஒவ்வொன்றிலும் 800 பயணிகள் வீதம்) சராசரி 1,600 பேர் வாரந்தோறும் தமிழகம் வருகிறார்கள்; பருவ நிலையையொட்டி இனி அகதிகளை ஏற்றிக்கொண்டு கப்பல் வருவது நிறுத்திவைக்கப்படும்.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர், அங்கு இரப்பர் -- தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றியவர்கள்; தென்னந் தோப்புக்கள் வைத்து வளர்த்தவர்கள்; எனவே அவர்களை அந்தமான் தீவில் குடியமர்த்தி, இரப்பர் தோட்டங்களும் -- தென்னந் தோப்புக்களும் அமைத்துக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; ஏற்கனவே 200 பேர் அடங்கிய 39 குடும்பங்கள் அந்தமான் தீவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த மறுவாழ்வுத் திட்டங்களை நேரில் கண்டறிந்து வருவதற்காக அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்களும், அகதிகள் மறுவாழ்வுத் துறை இயக்குநர் பி. வி. வெங்கடகிருஷ்ணனும் நவ. 7-ஆம் நாள் அந்தமான் செல்கிறார்கள்; சுமார் ஒரு வார காலம் அவர்கள் அங்கு சுற்றுப்பயணம் செய்வார்கள்.

தாயகம் திரும்பும் இலங்கை அகதிகள் குடும்பம், தலைமன்னாரில் கப்பலில் இடம் கிடைக்காமல் தவிக்கின்றனர் என்ற செய்தி குறித்து உயர் மட்ட அதிகாரி ஒருவர் வியப்புத் தெரிவித்தார்; 'கணிசமான அளவுக்குப் பயணிகள் எண்ணிக்கை இருக்குமானால் கூடுதலாக ஒரு கப்பல் விடுவதற்குக் கப்பல் போக்குவரத்துக் கார்ப்பரேஷனுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது; சாதாரணமாக இம்மாதிரி கப்பலில் இட நெருக்கடி ஏற்படக்கூடாது' என்று அந்த அதிகாரி விளக்கினார்.

"கப்பலில் பயணிகளின் எண்ணிக்கைக்கூட 500-லிருந்து 800-ஆக உயர்த்தப்பட்டுள்ளது; எதிர்பாராமல் பெரும் அளவுக்கு அகதிகள் கப்பலுக்கு வரும்போது அவர்கள் இடையில் சிரமப்படாமல் இடம் கிடைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது" என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

தஞ்சையில் நெல் கொள்முதல்

உணவுக் கார்ப்பரேஷன் நிலை

சென்னை, அக். 31—

உணவு உற்பத்திக் கார்ப்பரேஷனிடம் நெல்லை விற்பதில் நெல் உற்பத்தியாளர்கள் ஊக்கம் காட்டவில்லையாதலால், தஞ்சை மாவட்டத்தில் உணவுக் கார்ப்பரேஷன் ஏற்படுத்தியுள்ள 50-க்கு மேற்பட்ட நெல் கொள்முதல் நிலையங்களை மூடிவிடுவதுபற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் குறுவை மகசூலில் ஓர் இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்வதென இலக்கு நிர்ணயித்திருந்த இந்திய உணவுக் கார்ப்பரேஷன் 600 டன்களே கொள்முதல் செய்திருக்கிறது; மூன்று இலட்சம் ஏக்கர்களில் அறுவடை முடிந்துவிட்டது.

சென்ற ஆண்டு உணவுக் கார்ப்பரேஷன் 60,000 டன்களுக்கு மேல் குறுவை நெல் கொள்முதல் செய்தது.

பகிரங்க மார்க்கெட்டில் நெல் விலை அதிகமாக இருப்பதாலும், மாநில அரசு 'லெவி' கட்டுப்பாட்டை அகற்றியதாலும் உணவுக் கார்ப்பரேஷன், இலக்கு அளவுக் கொள்முதல் செய்ய முடியவில்லை.

"கார்ப்பரேஷன் போதுமான அளவுக் கொள்முதல் செய்ய முடியவில்லையென்றாலும், விலை ஆதரவு அளிப்பதென்ற அதன் முக்கியமான நோக்கம் நிறைவேறியிருக்கிறது" என்று கார்ப்பரேஷனின் மண்டல மானேசர் வி. சுந்தரேசன் கூறினார்.

ஆண்டுதோறும் ரூ. 8-கோடி

திருட்டுப் போன பொருள்களுக்கு இரயில்வே தரும் இழப்பீடு

ஊழியர்களையே பொறுப்பாக்க யோசனை -- அமைச்சர் அறிவிப்பு

மெங்களூர், அக். 31—

"சரக்குப் போக்குவரத்தில் நடக்கும் திருட்டுகளால் ஏற்படும் இழப்புக்கு இரயில்வே ஊழியர்கள் தங்களுடைய கைகளைவிட்டுப் பணத்தைப் போடும்படிச் செய்யப்படுவார்கள்.

"தலைமை நிர்வாகியிலிருந்து கூட்ஸ் குமாஸ்தா வரையில் இழப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்."

என்று இரயில்வே அமைச்சர் கே. அனுமந்தையா எச்சரித்தார்.

மைசூர் வர்த்தக சபைக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:—

"இழப்புக்கு ஊழியர்களை நேரடியாகப் பொறுப்பாக்கும் ஏற்பாடு செயல்படுத்தப்பட்டால் திருட்டுக்கள் குறையும்.

திருட்டுகளால் இரயில்வேக்களுக்கு ஏராளமான இழப்பு ஏற்படுகிறது; இதுதான் பற்றுக்குறை வரவு--செலவுத் திட்டத்துக்கு உண்மையான காரணமாகும்.

நம்முடைய ஊழியர்களில் சிலரே இந்தத் திருட்டை நடத்துகின்றனர்; பல இடங்களில் இரயில்வே பாதுகாப்புப் படைக்கும்—திருடர்களுக்கும் தொடர்பு இருக்கிறது.

இதைத் தடுப்பதற்கு முதல் நடவடிக்கையாக இரயில்வே பாதுகாப்புப் படைக்கும் பதிலாக இராணுவத்தினரை நிறுத்துவது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்; மேற்கு வங்காளத்தில் இந்த நடவடிக்கை பரீட்சித்துப் பார்க்கப்பட்டது; அது மிகவும் பலன் தந்திருக்கிறது.

கடந்த 5 மாதங்களில் வாகன்களைச் சூறையாடிய 70 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இரயில்வே பாதுகாப்புப் படைக்காக ஆண்டுதோறும் இரயில்வேக்கள் ரூ. 12 கோடி செலவழிக்கின்றன; அதேசமயத்தில் திருட்டுக்களால் ஏற்படும் இழப்புக்களுக்காக இரயில்வே ரூ. 8-கோடி நட்டஈடு செலுத்த வேண்டியிருக்கிறது; இந்த நிலை வருந்தத்தக்கதாகும்."

சர்க்கரை உற்பத்திக்கு பீட்ரூட் கிழங்கு

தமிழகத்தில் பயிரிடச் சோதனைத் திட்டம்

சென்னை, நவ. 2—

சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய 'பீட்ரூட்' கிழங்கைத் தமிழ்நாட்டிலுள்ள மலைப் பகுதிகளில பயிரிட்டுச் சோதனை பார்க்கப்படுகிறது.

அதிக அளவு சர்க்கரைச் சத்துள்ள இக்கிழங்கு வகையின் வித்துக்கள் மேற்கு ஜெர்மனியிலிருந்து கொண்டு வரப்பட்டு, ஏற்காடு— உதகமண்டலம் — கொடைக்கானல்—ஆனைமலை ஆகிய மலைகள் ஒவ்வொன்றிலும் 10 சென்ட் பரப்பு நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளன.

இதைப் பயிரிட்டு 3 மாதகாலமாகிவிட்டது; இதுவரையில் பயிர் திருப்திகரமாகவே இருக்கிறது; டிசம்பர் மாதம் இது அறுவடை செய்யப்படும்.

இது வெற்றியடைந்தால், சுமார் ஓர் இலட்சம் ஏக்கர் நிலத்தில் இந்தக் கிழங்கு விளைய வைக்கப்படும்.

இந்தக் கிழங்கு, ஏக்கருக்கு 20 டன் விளையும்.

ஒவ்வொரு டன் கிழங்கிலும் 16 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதம் அளவுக்குச் சர்க்கரை கிடைக்கும்.

தமிழ்நாட்டில் இப்போது கரும்பிலிருந்து சர்க்கரை எடுக்கப்படுகிறது; ஏறத்தாழ 1,35,000 ஹெக்டேர் நிலத்தில் கரும்பு பயிரிடப்படுகிறது.

ஒரு டன் கரும்பில் 8 சதவிகிதம் சர்க்கரைதான் கிடைக்கிறது; இது மிகவும் குறைவு; எனவே, அதிக சர்க்கரைச் சத்துள்ள (18 சதவிகிதம்) பீட்ரூட் கிழங்கைப் பயிரிடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறதாம்.

இலங்கைச் சிறையில் கலகக்காரர்கள்

16,000 பேர் இருப்பதாகத் தகவல்

இலண்டன், நவ. 1—

"கடந்த ஏப்ரலில் நடத்தப்பட்ட புரட்சியில் ஈடுபட்ட 16,000 பேர் இன்னமும் சிறையிலேயே இருந்துவருகின்றனர்"

என்று இலங்கைத் தலைமைச்சர் சிரிமாவோ பண்டாரநாயகா தெரிவித்திருக்கிறார்.

இந்தப் புரட்சியாளர்கள் ஏராளமானோர் கைது செய்யப்பட்டுவிட்டிருப்பினும், ஆயிரக்கணக்கான பேர் இன்னமும் தொல்லை தந்து கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆயினும், நிலைமை கட்டுக்கடங்கியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

"மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் காடில்கரின் போனசுத் திட்டம், அரசுத் துறை நிறுவனங்களுக்கும் பொருந்தும்"

என்று, அமைச்சரவை அரசியல் குழு முடிவு செய்திருக்கிறது.

மாநிலத்தின்பொறுப்பிலுள்ள சேரிச் சீரமைப்புத் திட்டம்

மத்திய அரசு எடுத்துக்கொள்ள முயற்சி

புதுடில்லி, நவ. 2—

"சேரிச் சீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த-- அந்தத் திட்டத்தை மாநிலத் துறையிலிருந்து மத்தியத் துறைக்கு மாற்ற வேண்டும்" என்று வீட்டு வசதி அமைச்சகம் தெரிவித்த யோசனையைத் திட்டக் குழு ஏற்க மறுத்துவிட்டது.

இதைப் பற்றி மத்திய வீட்டு வசதித் துணையமைச்சர் குஜ்ரால் தெரிவிக்கையில், 'மாநில வீட்டு வசதி அமைச்சர்கள் மாநாடு நவம்பர் 5, 6-ந் தேதிகளில் புதுடில்லியில் நடக்கிறது; இவ்விஷயத்தை தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் வைக்கத் திட்டக் குழுவை வற்புறுத்த வேண்டுமா என்பது பற்றி அம்மாநாடு பரிசீலிக்கும்' என்று கூறினார்.

1956 மே மாதம் சேரிச் சீரமைப்புத் திட்டத்தை மத்திய வீட்டு வசதி அமைச்சகம் கொண்டுவந்தது; இந்தத் திட்டம் 1969 ஏப்ரலில் மாநிலத் துறைக்கு மாற்றப்படும் முன்பாக இந்தத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கான செலவில் 87.50 சதவிகிதம் வரை (50 சதவிகிதம் கடன்— 37.50 சதவிகிதம் மானியம்) மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு உதவி அளித்து வந்தது; எஞ்சிய 12.50 சதவிகிதத்தை மாநில அரசு அல்லது உள்ளாட்சிமன்றம் தனது பங்காக ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும் என்ற ஏற்பாடு இருந்து வந்தது.

1969 ஏப்ரலில் இந்தத் திட்டம் மாநிலத் துறைக்கு மாற்றப்பட்ட பிறகு, இந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசு மொத்தமான கடன் உதவியையும் மாநிலங்களுக்கு அளித்து வருகிறது

படிப்படியாகச் சேரிச் சீரமைப்பு

தாம்பரம் நகராட்சித் திட்டம்

சென்னை, நவ. 2—

படிப்படியாகச் சேரிகளைப் மேம்பாடுச் செய்யும் திட்டம் ஒன்றைத் தாம்பரம் நகராட்சி மேற்கொள்ளும்.

தாம்பரம் நகராட்சித் தலைவர் முனு. ஆதி எம்.எல்.ஏ. இத்தகவலைத் தெரிவித்தார்.

"முதலில் ரூ. 40,000 செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்; பின்பு படிப்படியாகச் சுமார் 10,000 மக்களுக்கு இது பயன் தருவதாக இருக்கும்" என்று அவர் சொன்னார்.

"ரூ. 60 இலட்சம் செலவில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ஒன்று அரசின் அனுமதிபெற்ற பின்பு நிறைவேற்றப்படும்" என்றும் அவர் சொன்னார்.

மூடப்பட்ட ஆலைகளையெல்லாம் மத்திய அரசு ஏற்குமா?

ஒரு கொள்கையை உருவாக்க முயற்சி

புதுடில்லி, நவ. 2—

"மூடப்பட்ட தொழில் நிறுவனங்களை ஏற்று நடத்துவது பற்றி அரசு ஒரு கொள்கையை உருவாக்கும்"

என்று தொழில் வளர்ச்சி அமைச்சர் மொய்னுல்ஹக் சௌதுரி, தம்முடைய அமைச்சுத் துறைக்கான நாடாளுமன்ற ஆலோசனை குழுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இப்பிரச்சினையின் இரண்டு அம்சங்கள் அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்.

அரசாங்கம் ஏற்று நடத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் தன்மை பற்றியது முதல் பிரச்சினை; மிகவும் பழைய இயந்திரங்களினால் பாதிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் ஏராளமான பணத்தைப் போட்டு ஏற்று நடத்துவது நல்லதா என்பது பரிசீலிக்கப்படுகிறது.

அரசு ஏற்று நடத்தும் நிறுவனம் இலாபகரமாகச் செயல்படத் தொடங்கிய பிறகு, அதை மறுபடியும் பழைய சொந்தக்காரர்களிடம் திருப்பிக் கொடுப்பதா அல்லது அரசாங்கத் துறை நிறுவனமாக நீடிப்பதா என்பது இரண்டாவது பிரச்சினையாகும்; இதுவும் பரிசீலனையில் உள்ளது.

தொழில் வளர்ச்சி--ஒழுங்குச் சட்டத்தின்மூலம் இந்த இலட்சியங்களை அடைவதா அல்லது இதற்கு வேறு ஏற்பாடுகள் அவசியமா என்பது பரிசீலனையில் உள்ளது.

மூடப்பட்ட எல்லாத் தொழில் நிறுவனங்களையுமே அரசு ஏற்று நடத்துவதை அமைச்சர் ஆதரிக்கவில்லை என்று தெரிகிறது; 'ஒவ்வொரு நிறுவனத்தின் பிரச்சினையிலும் அது என்ன காரணங்களால் மூடப்பட்டது என்பதைப் பரிசீலித்து முடிவு செய்ய வேண்டும்' என்றார்.

தொழில் வளர்ச்சி வேகம் குறைவாயிருப்பது பற்றியும், கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது; உறுப்பினர்களும் அமைச்சரும் இதுபற்றிக் கவலை தெரிவித்தனர்.

வேலையில்லாப் பொறியர்கட்கு காண்டிராக்ட்

மத்திய அரசு முடிவு

புதுடில்லி, நவ. 1—

வேலையில்லா பொறியியல் பட்டதாரிகளுக்கு அரசு காண்டிராக்ட் தருவதில் சலுகை காட்ட வேண்டும் என்று மத்திய பொதுப் பணித் துறை முடிவு செய்திருக்கிறது.

பதிவு செய்யப்பட்ட தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தரப்படும் சலுகைகள், இப்படிப்பட்ட பொறியர் பட்டதாரிகளுக்கும் தரலாம் என்று அது முடிவு செய்திருக்கிறது.

நிலக்கரிச் சுரங்கங்கள்

அரசுடைமையாக்குவது பற்றிப் பரிசீலனை

தன்பாத், நவ. 1—

எல்லாவிதமான நிலக்கரிச் சுரங்கங்களையும் உடனடியாக நாட்டுடைமையாக்குவதில்லை என்று மத்திய அரசு தீர்மானித்திருக்கிறது.

இது குறித்த தொழில் நுணுக்க ஆய்வுக் குழு, இவற்றை நடத்துவதில் உள்ள சிரமங்களை எடுத்துக் கூறி நாட்டுடைமையாக்குவதில் நிதானம் காட்டுமாறு அரசுக்குத் தெரிவித்ததையொட்டி இம்முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதாம்.

மக்களவையில் தமிழ்நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு

ஈடு செய்யாவிடில் குடும்ப நலத் திட்டத்தில் ஊக்கம் குன்றும்

பம்பாயில் சென்னை மேயர் சா. கணேசன் விளக்கம்

பம்பாய், அக். 31—

"தமிழ்நாட்டில் மக்கள் தொகைக் குறைப்புக்கு ஏற்ப மக்களவையில், தமிழ்நாட்டின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மத்திய அரசு குறைத்தால், குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தளர்த்த வேண்டிய நிலை ஏற்படலாம்"

என்று சென்னை மேயர் சா. கணேசன், மேயர்களின் மாநாட்டில் தெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"1962-ல் மக்களவையில் தமிழ்நாட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை 42-லிருந்து 39-க்குக் குறைக்கப்பட்டுவிட்டது; குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் உற்சாகத்துடன் நிறைவேற்றப்பட்டால் அதன் எண்ணிக்கை மேலும் குறையலாம் என்று கருதப்படுகிறது: எனவே பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மீண்டும் 41-ஆக உயர்த்தவேண்டும்."

ஒட்டப்பிடாரம் நூலகம்

அண்ணா படத் திறப்பு

19—10—71-ல் ஒட்டப்பிடாரம் கிளை நூலகத்தில் அண்ணா உருவப் படத் திறப்பு விழா நடைபெற்றது.

அண்ணா அவர்களின் உருவப் படத்தை முப்புலிப்பட்டி தி. மு. கழகத்தினர் நூலகத்திற்கு நன்கொடையாக அளித்தனர்.

விழாவிற்குக் கூட்டுறவு வங்கித் துணைக் காசாளர் சுந்தரராசன் தலைமை தாங்கினார்.

ஆசிரியர் சுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றார்.

புதியம்புத்தூர் ஊராட்சிமன்ற தலைவரும் தி. மு. க. பொருளாளருமான மு. துரைப்பாண்டியன் அண்ணா படத்தைத் திறந்துவைத்துப் பேருரை ஆற்றினார்.

முப்புளப்பட்டி தி. மு. க. துணை செயலாளர் தேவராசன் சிறப்புரை ஆற்றினார்கள்.

திரு. ஆறுமுகம்—மணி ஆகியோர் அனைவருக்கும் இனிப்பு வழங்கினர்.

நூலகர் மு. இலட்சுமணன் நன்றி நவின்றார்.

பூமிக்குள் அணுகுண்டு சோதனை

வாஷிங்டன், அக். 31—

பூமிக்கடியில் அணுகுண்டுச் சோதனை செய்வதென்று அமெரிக்க அணுசக்திக் கமிஷன் முடிவு செய்திருக்கிறது.

இது அமெரிக்கா இதுவரையில் பூமிக்கடியில் நடத்திய சோதனைகளில் பெரிதாக இருக்கும்; நவம்பர் 5-ம் நாள் வாக்கில் இச்சோதனை நடைபெறும்.

'அம்சிட்கா' என்ற தீவில் இச்சோதனை நடைபெறும்; அத்தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்பவர்களும், கானடா -- ஜப்பான் அரசாங்கங்களும் எதிர்ப்புத் தெரிவித்தும்கூட அமெரிக்க அதிபர் நிக்சன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

பூமிக்கு ஒரு மைல் அடியில் 50 இலட்சம் டன் (டி. என். டி.) வெடி மருந்து சக்தியுள்ள குண்டு வைத்து வெடித்துச் சோதனைச் செய்யப்படும்.

இந்தச் சோதனையால் காற்றில் மின்கதிர் வீச்சுப் பொருள்கள் பறக்கும் என்றும் அல்லது இந்தப் பகுதியில் பூகம்பம் அல்லது கடல் கொந்தளிப்பு ஏற்படலாம் என்றும் சுற்றுப் பகுதிகளில் வாழ்பவர்கள் கூறியதை அமெரிக்க அணுசக்திக் கமிஷன் தலைவர் ஜேம்ஸ் ஷ்லி சிங்கர் மறுத்தார்.

திருவரங்கத்திற்குக் குடிநீர்த் திட்டம்

திருச்சி, நவ. 2—

திருவரங்கம் நகராட்சியின் குடிநீர்த் திட்டத்திற்கு (ரூ. 19.61 இலட்சம் மதிப்புள்ளது) தமிழ் அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது.

"இத்திட்டம் தொடர்பான பணிகள் ஏற்கனவே தொடங்கிவிட்டன" என்று நகராட்சித் தலைவர் வெங்கடேசுவர தீட்சிதர் தெரிவித்தார்.

தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை

செயற்குழுக் கூட்ட முடிவுகள்

28-10-71-ல், சென்னை—தேனாம்பேட்டை 'அன்பக'த்தில், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைத் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம், பேரவைத் துணைத் தலைவர் திரு. என். நல்லுசாமி பி.ஏ.பி.எல். தலைமையில் நடைபெற்றது.

கழகத் துணைப் பொதுச்செயலாளர் அமைச்சர் என். வி. நடராசன் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் என். வி. என். சோமு அவர்களும், திருவாளர்கள் நல்லுசாமி, காட்டூர் கோபால், மேட்டூர் அ. பாலு, ஏ.கே. சிவசாமி, எஸ் அக்கினிராசு, எஸ் ஆர், இராதா, இரா. மா. பொன்னுசாமி, பி. கருப்புசாமி, வி. முருகு, சி. ஆர். கோலப்பா, எச். ஆர். விஜயன், எம். மாணிக்கம், இரெ. கோவிந்தசாமி, வை. பார்த்தசாரதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தற்போது நடைமுறையில் இருந்துவருகின்ற சட்டத்தின் முழுத் தன்மைகள் குறித்தும் மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் காடில்கர் தெரிவித்த கருத்துக்கள் குறித்தும், முத்தரப்பு மாநாட்டு நடவடிக்கைகள் -- தமிழகத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி, நடராசன் அவர்கள் டெல்லியில் வலியுறுத்தித் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்தும், பேரவையினை 16-9-71-ம் நாள் கூட்டத்தில் போனசு சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்தும் செயற்குழு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது; பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

1. தொழிலாளர்களுக்குப் போனசாகக் குறைந்தபட்சம் அவர்களது மொத்தச் சம்பளத்தில் 4 சதவிகிதம் என்று இருப்பதை 8 1/3 சதவிகிதமாக உயர்த்துவதற்கான வகையிலும், உயர்ந்தபட்சம் 20 சதவிகிதம் என்ற எல்லையை எடுத்துவிட வேண்டும் என்ற வகையிலும் சட்டத் திருத்தம் செய்வதற்கு ஆவன செய்திடுமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

இந்தக் கோரிக்கைகளுக்காகக் குழுக்கள் போடுவது அல்லது மாநாடுகள் போடுவது என்கின்ற வகையில் காலந்தாழ்த்தாமல், நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்தச் சட்டத் திருத்தத்திற்கு வழிசெய்திட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

இவற்றை வலியுறுத்துவதற்கான வகையில், தமிழ்நாடு—கேரளம் — கருநாடகம் — அந்தமான் முழுவதுமுள்ள பேரவையில் இணைந்துள்ள தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களின் சார்பில் நவம்பர் 14-ம் நாள் ஆங்காங்கு ஊர்வலங்கள் நடத்தியும், பொதுக்கூட்டங்கள் நடத்தியும் நிறைவேற்றுகின்ற தீர்மானங்கள் அனைத்தையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பது என்று செயற்குழு தீர்மானிக்கிறது.

பேரவைச் சார்பிலான 'போனசு சட்டத் திருத்தப் போராட்ட'த்தின் முதல் கட்டமான ஊர்வலம் -- பொதுக்கூட்டங்கள் நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றம் பேரவையில் இணைந்துள்ள சங்கங்கள் ஆங்காங்கு உடனடியாகத் தக்க முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், எடுக்கப்படுகின்ற முயற்சிகளைப் பேரவைக்குத் தெரிவித்து முறையாகச் செயல்படுத்த வேண்டுமென்று செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

2. 14—8—71-ம் நாளின் செயற்குழுக் கூட்டத்திலும், 16-9-71-ம் நாளின் பொதுப் பேரவைக் கூட்டம் வரையிலும் பேரவையில் இணைக்கப்பட்டுள்ள தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்கள் தவிர, இன்றுவரை பேரவையில் இணைப்பதற்கு விண்ணப்பித்துத் தொகை முழுவதும் செலுத்தியுள்ள சங்கங்களைப் பேரவையில் இணைத்துக் கொள்வது இச்செயற்குழு ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

3. ஒரே தொழிற்சாலையில் பேரவையில் இணைப்பதற்கு விண்ணப்பித்துள்ள இரண்டு சங்கங்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டியிருக்கிறது; அவ்வாறு உள்ள சங்கங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுச்செயலாளரை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

4. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள அதிகாரபூர்வமான பட்டியல்கள்படி உள்ள உறுப்பினர்களைக் கொண்டு ஆங்காங்கு விவசாயத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க வட்ட வாரியான அமைப்புக்கான தேர்தலை நடத்துவதற்கும், அதற்கான தேர்தல் அதிகாரிகளை நியமித்து இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் பேரவைப் பொதுச்செயலாளரை இச்செயற்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

5. தமிழக முதல்வரும் -- கழகத் தலைவருமான டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 'டாக்டர்' பட்டம் அளிக்கப்பட்டதையொட்டித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில் டிசம்பர் மாதத்தில் பாராட்டு விழா நடத்துவது என்றும், அந்தப் பாராட்டு விழாவில் தமிழகத்திலுள்ள பேரவையைச் சார்ந்திருக்கின்ற எல்லாத் தொழிற் சங்கங்களும் பங்கு கொண்டு சிறப்பான வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்வது என்றும் செயற்குழு தீர்மானிக்கிறது.

அ. சேலம் மாவட்டத்தில் சனவரித் திங்களில் தொழிலாளர் மாநாடு நடத்துவது என்றும், அம்மாநாட்டின்போது தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் முன்னேற்றச் சங்கம் -- விசைத்தறி தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் தமிழ்நாடு ரீதியிலான பிரதிநிதிகள் மாநாடு நடத்துவது என்றும் செயற்குழு தீர்மானிக்கிறது.

6. தொழிற் சங்கங்களை, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையுடன் இணைத்திடுவதற்குக் குந்தகமாக ஆங்காங்கு தொழில்வாரியாகவோ அல்லது பல்வேறு தொழில்களிலும் இயங்கி வருகின்ற தொழிற் சங்கங்களை இணைத்துச் செயல்படுகின்ற இணைப்புக் கவுன்சில் -- கூட்டணி -- முன்னணி -- பேரணி போன்ற ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள் செய்வதைப் பேரவை அங்கீகரிப்பது இல்லையென்றும், அத்தகைய முயற்சிகளில் பேரவைத் தொடர்பான எவரும் ஈடுபடுவார்களானால் அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது என்றும் செயற்குழு தீர்மானிக்கிறது.

7. திருச்சியில் திரு. எம். எஸ். மணி அவர்கள் தலைவராகவும் -- திரு. எஸ். ஜி. கிருஷ்ணன் அவர்கள் பொதுச்செயலாளராகவும் இருந்து நடத்துவதாகத் தெரிவித்தும், பேரவையில் இணைத்துக்கொள்ள வேண்டுமென்றும் விண்ணப்பித்துள்ள 'தமிழ்நாடு தொழிலாளர் முன்னேற்றக் கூட்டணி' என்ற அமைப்பினைப் பற்றி இந்தச் செயற்குழு ஆழ்ந்து பரிசீலித்தது; இந்த அமைப்பு, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகமாக இருக்கின்ற காரணத்தால் இதனை அங்கீகரிப்பது இல்லையென்றும், இந்த முயற்சியினைக் கைவிட வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட தோழர்களைக் கேட்டுக் கொள்வது என்று இந்தச் செயற்குழு தீர்மானிககிறது.

8. பேரவையில் இணைக்கப்பட்டுள்ள நமது முன்னேற்றச் சங்கங்களுக்கு எதிரான பிரச்சாரங்களையும் -- போட்டிச் சங்கங்களையும் அமைத்துப் பணியாற்றுவதில் தொடர்ந்து உடுமலைப்பேட்டைத் தோழர் ஏ. எஸ். மணி அவர்கள் ஈடுபட்டு வருவது குறித்து ஏற்கனவே தலைமைக் கழகத்திற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை தீர்மானம் இயற்றி இருக்கிறது; அதற்குப் பின்னரும் தொடர்ந்து பேரவையில் இணைக்கப்பட்டுள்ள நமது முன்னேற்றச் சங்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால், அவர்மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுவதற்கு ஆவன செய்திடுமாறு கழகத் தலைவர் -- கழகப் பொதுச்செயலாளர் ஆகியவர்களை இந்தச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

9. இதுவரையில் ஏற்பட்டுள்ள வரவு-செலவுக் கணக்குகள் வாசிக்கப்பட்டதைப் பரிசீலித்து இந்தச் செயற்குழு ஒருமனதாக ஏற்றுக்கொள்கிறது.

10. பேரவையின் அலுவலகப் பயன்பாட்டிற்காக சிம்சன் குருப் கம்பெனிகள் தொழிலாளர் -- குமாஸ்தாக்கள் சங்கச் சார்பில் ஒரு ஸ்டீல் மேசை, ஒரு ஸ்டீல் நாற்காலி இவைகளை 18-9-71-ந் தேதியன்று கழகப் பொருளாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மூலமாக அன்பளிப்பாக அளிக்கப்பட்டதற்கு இச்செயற்குழு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இறுதியில் பேரவைச் செயலாளர் திரு. சிவசாமி அவர்கள் நன்றி கூறினார்.

[illegible] முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குத்தெரு: சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

முதல்வர் கலைஞர் சுற்றுப்பயணம்

நவ. 3: பொள்ளாச்சித் தொகுதியில் சுற்றுப்பயணம்.

நவ. 4: காலை 9 30 மணி: சேலம் — கூட்டுறவு நூற்பாலையில் விசைத்தறி பாவு ஆலை அடிக்கல் நாட்டு விழா.

காலை 10-30 மணி: அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க வரவேற்பு.

மாலை 5 மணி: சேலம்—பெரியார் அவர்களின் 93-வது பிறந்த நாள் விழா.

இரவு 7-30 மணி: சேலம்—பொதுமக்கள் வரவேற்பு.

கலைஞருக்கு வரவேற்பு

சேலம் -- அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி -- விற்பனைச் சங்கச் சார்பில், முதலமைச்சர் டாக்டர் கலைஞருக்கு வரவேற்பு -- பாராட்டு விழா, 4-11-71 காலை 10 மணிக்கு நடைபெறும்.

சங்கத் தலைவர் திரு. ஈ. ஏ. ஆர். மாரியப்பன் வரவேற்பு மடல் படித்தளிப்பார்; டாக்டர் கலைஞர் அவர்கள், அறிஞர் அண்ணா படத்தைத் திறந்துவைப்பார்.

அமைச்சர் க. இராசாராம் அவர்கள், கலைஞர் படத்தைத் திறந்து வைப்பார்.

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், ஈ. ஆர். கிருட்டினன் எம்.பி., கே. செயராமன் எம்.எல்.ஏ., எஸ். ஆறுமுகம் எம்.எல்.ஏ., சி. பழனியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

இந்த நூற்றாண்டு கண்டிராத கடும் புயல்

கணக்கிட முடியாத அளவுக்கு உயிர் -- பொருட் சேதங்கள்

ஒரிசாவில் மக்கள் தவிப்பு--துயர் தணிப்பு பணிகளில் அரசு அதிகாரிகள்

புவனேசுவரம், நவ. 2—

கடந்த வெள்ளி -- சனி இரவில் ஏற்பட்ட புயல் -- கடல் கொந்தளிப்புக் காரணமாக ஒரிசாவில் ஏராளமான மக்கள் உயிரிழந்திருக்கின்றனர்; இறந்தோர் எண்ணிக்கையைத் திட்டவட்டமாகக் கூற முடியவில்லையென்றாலும், அது 10,000-த்துக்குமேல் தான் இருக்கும் என்று கூறப்படுகிறது.

ஒரிசாவின் வட கிழக்குக் கடலோரப் பகுதியில் 100 மைல் தூரத்துக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது; இந்தப் பகுதியில் பெரும் ஓலை வீடுகளே கட்டப்பட்டிருக்கின்றன; இவைகள் அனைத்தும் பிய்த்து எறியப்பட்டுவிட்டன; பல வீடுகளின் மண் சுவர்களும் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டிருக்கின்றன; கட்டாக் நகரில் ஏராளமான வீடுகள் இடிந்து வீழ்ந்திருக்கின்றன.

இந்தப் புயல், ஒரிசாவில் இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட புயல்களிலேயே பயங்கரமானதாகும் என்று கருதப்படுகிறது.

1897-ல் கடும் புயல் ஒன்று ஏற்பட்டு சுமார் 20,000 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அதிகாரிகள் கூறினர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய அரசு எல்லாவித முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது; ஆனால் போக்குவரத்துக்கான பாதைகள் கடும் சேதமடைந்திருப்பதால, மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது; இதனால் பல இடங்களுக்கும் அதிகாரிகள் செல்லவோ, சேத விவரத்தை அறியவோ முடியவில்லை; இதனால் உயிரிழப்புத் தொகையோ சேத அளவோ கூற முடியவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

கட்டாக்கில் மட்டும் 8,000 பேர் உயிரிழந்திருக்கக்கூடும் என்றும் மொத்தம் குறைந்தது 13,000 பேராவது இறந்திருக்கககூடும் என்றும் அதிகாரப்பற்றற்ற செய்திகள் கூறுகின்றன.

ஒரிசா சட்டமன்ற உறுப்பினர் பகவத் பிரசாத் என்பவர், 15,000 பேர் மாண்டிருக்கக் கூடும என்றும், 50,000 கால்நடைகள் மாண்டிருப்பதாகவும் 5 இலட்சம் பேர் வீடிழந்திருப்பதாகவும் மதிப்பிட்டுக் கூறியிருக்கிறார்.

பாரதீப் துறைமுகத்துக்கு ரூ. 2 கோடி அளவில நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மதிப்பிடுகிறார்.

துறைமுகத்தில் 8 டன் வரையிலுள்ள பெரிய பாறுங்கற்கள் கூடக் கடல் கொந்தளிப்பினால் இடம் பெயர்ந்துவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆக்கிரமிப்புக்கு இந்தியா முயற்சிக்கிறதாம்

யாகியா கான் பிதற்றல்

'போர் மூண்டே தீரும்' என்கிறார்

நியூயார்க், நவ. 2—

"எந்த நிமிடத்திலும் போர் வரத்தான்போகிறது; 'அப்படி இல்லை' என்று நான் சொல்லக் காரணமில்லை; ஏனெனில், இந்தியா ஏற்கனவே எங்களுடன் போர் நடத்திக் கொண்டுதான் இருக்கிறது.

"நாங்கள் திருப்பித் தாக்காததால்தான், நேருக்கு நேர் மோதுதல் ஏற்படவில்லை என்பதற்குக் காரணமாகும்"

என்று, பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாகியா கான், 'நியூஸ் வீக' என்ற பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் புளுகியிருக்கிறார்; மேலும அவர் கூறியுள்ள விதண்டாவாதங்கள் வருமாறு:—

"ஏற்கனவே பதட்டமாக உள்ள ஒரு சூழ்நிலையை நான் மேற்கொண்டு மோசமாக்க விரும்பவில்லை; ஆனால், இந்தியர்கள் எங்கள் நாட்டின் ஒரு பகுதியைப் பிடித்துக்கொண்டு -- அங்கு ஒரு பொம்மை அரசை ஏற்படுத்தலாம் என்ற நோக்கத்துடன், தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தினால் அது போரே ஆகும.

செஞ்சீனாவைத் துணைக்கு அழைக்கும் போக்கு

"அப்படி ஏற்பட்டால், பாகிஸ்தான் தாக்கப்படுவதைச் சீனா சகித்துக் கொண்டிருக்காது; எங்களுக்குத் தேவையான எல்லா ஆயுதங்களையும -- மற்ற சாதனங்களையும நாங்கள் பெறுவோம்.

கிழக்கு வங்கத்திற்கு அநீதி இழைத்தது உண்மைதானும்

வங்காளிகளை மேற்குப் பாகிஸ்தான் நியாயமாக நடத்தவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்; ஆனால், அதை இப்போது ஈடு செய்ய முயற்சித்துக்கொண்டிருக்கிறோம.

டிசம்பர் 20-ஆம் நாளன்று ஒரு புதிய அரசியல அமைப்பு அறிவிக்கப்படும்; வெளிநாட்டு விவகாரம் -- வரி விதிப்பு தவிர மற்ற எல்லாவற்றிலும சுய அதிகாரம் இருக்கும்.

முஜிபுர் ரகிமான் பற்றி விசித்திரக் கூற்று

ஷேக் முஜிபுர் ரகிமான் இப்போது வங்காளத்திற்குத் திரும்பிச் சென்றால் அவருடைய மாநில மக்களே அவரைக் கொன்றுவிடுவார்கள்; ஏனெனில் இவ்வளவு தொல்லைகளுக்கும் அவர்தான காரணம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

நினைத்த மாத்திரத்தில் அவரை நான் விடுதலை செய்துவிட முடியாது; ஆனால், நாட்டு மக்கள் கோரினால், அவரை விடுதலை செய்வேன்."

ஐ. நா.-வில் பாகிஸ்தான் தூதுக்குழுவின் தலைவராக இருக்கும முகமது அலி நேற்று ஊ-தாண்டைச் சந்தித்தபோது, இந்தியாவுடன் போர் செய்யவேண்டிய நிலை தவிர்க்க முடியாததாகிவிட்டதாக அறிவித்திருக்கிறார்.

இவர் கடந்த இரண்டு வாரமாகப் பாகிஸ்தானில் தங்கிவிட்டுத் திரும்பியிருக்கிறார்.